## கிராண்ட் பிரிக்ஸ் சர்வதேச போட்டியில் தங்கம் வென்று அசத்திய மதுரை இளைஞர்




**சென்னை:** கிரீஸ் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் நாட்டிற்காக தங்கம் வென்ற மதுரை இளைஞர் செல்வ பிரபுவுக்கு டிடிவி தினகரன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து இன்று அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்: "மதுரை மாவட்டத்தை சேர்ந்த செல்வ பிரபு கிரீஸ் நாட்டின் வெனிசெலியா நகரில் நடைபெற்ற கிராண்ட் பிரிக்ஸ் சர்வதேச போட்டியில், மும்முறை நீளம் தாண்டுதலில் ஆடவர் பிரிவில் தங்கம் வென்று சாதனை படைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழகத்தின் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்த செல்வ பிரபு இந்தியாவிற்காக சாதனை படைத்திருப்பதை பெருமிதத்துடன் பாராட்டுகின்றேன். இந்த சாதனையின் வாயிலாக தாய்லாந்தில் ஜூலை 12ம் தேதி நடைபெறும் 2023 Asian Athletics Championships போட்டிக்கு தகுதி பெற்றுள்ள செல்வ பிரபு, எதிர்காலத்தில் மேலும் பல சாதனைகளை பெறவும் வாழ்த்துகின்றேன்" என தினகரன் கூறியுள்ளார்.

## எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் தமிழக பெண்ணுக்கு சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு



**சென்னை:** எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் தமிழக பெண்ணுக்கு சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

விருதுநகர் மாவட்டம் ஜோயல்பட்டியை சேர்ந்தவர் முத்தமிழ்செல்வி (34). திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகள் உள்ளன. இவர்கள் குடும்பத்துடன் சென்னை தாம்பரம் அடுத்த மண்ணிவாக்கத்தில் வசிக்கின்றனர். முத்தமிழ்செல்வி தானும் சாதிக்க வேண்டுமென்று, பல்வேறு மலைகளில் கண்களை மூடியவாறு ஏறியும், இறங்கியும், வில் வித்தையிலும் பல சாதனைகளை புரிந்துள்ளார். எவரெஸ்ட் சிகரம் ஏறுவதற்கு பயிற்சி மேற்கொண்டார். ஆனால் பொருளாதார வசதியில்லாமல் தவித்த நிலையில் தமிழக அரசும், தன்னார்வ அமைப்புகளும் நிதியுதவி வழங்கின. கடந்த 23-ம் தேதி எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை படைத்தார். தமிழகத்தில் இருந்து எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண் என்ற பெருமையை பெற்ற முத்தமிழ்செல்வியை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தினார்.

இந்நிலையில், நேற்று டெல்லியில் இருந்து விமானம் மூலம் முத்தமிழ்செல்வி சென்னைக்கு வந்தார். விமான நிலையத்தில் அவருக்கு உறவினர்கள் மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறும் போது, "எவரெஸ்ட் சிகரம் ஏற வேண்டுமென மூன்று ஆண்டுகளாக திட்டமிட்டிருந்தேன். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தேன். எனக்கு உதவி செய்த தமிழக அரசுக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,எனது பயிற்சியாளர் அனைவருக்கும் நன்றியை

தெரிவித்து கொள்கிறேன். தமிழகத்தில் இருக்கும் பெண்களால் முயற்சி செய்தால் முடியாதது எதுவும் இல்லை. அனைத்து உயரமான சிகரங்களை ஏற வேண்டும் என்பதுதான் என் அடுத்த இலக்கு" என்றார்

## தமிழகத்தில் ஓர் ஆண்டில் 321 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்பு




**சென்னை:** தமிழகத்தில் ஓராண்டில் 321 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தை குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க அனைத்து துறை அலுவலர்களுக்கான பயிற்சி பட்டறையை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் இன்று தொடங்கி வைத்தார். இது தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றிடவும் மற்றும் தமிழகத்தை குழந்தைத் தொழிலாளர் முறை இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

1986-ம் வருட குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்த மாநில செயல்திட்டம், நிலையான இயக்க நடைமுறைகள் ஆகியவற்றை உருவாக்கி குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுதலில் தமிழக அரசு பிற

மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழ்கின்றது. குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவோர் மீது தவிர சட்ட, அமலாக்கம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 1.4.2022 முதல் 30.04.2023 வரை 321 குழந்தைகள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட காலத்தில் 224 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.48,28,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானின் ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம் ரூ.128 கோடி முதலீட்டில் தொழிற்சாலை - முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்




**சென்னை**: தமிழகத்தில் முதல்முறையாக ஜப்பானின் ஓம்ரான் (OMRON) ஹெல்த்கேர் நிறுவனம் ரூ.128 கோடி முதலீட்டில் தானியங்கி ரத்த அழுத்த மானிட்டர் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் வகையில், வெளிநாடுகளுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் ஸ்டாலின், சிங்கப்பூர் பயணத்தை முடித்துக்கொண்டு ஜப்பான் சென்றுள்ளார். நேற்று முன்தினம் ரூ.818கோடி முதலீட்டுக்காக முதல்வர்முன்னிலையில் 6 ஜப்பானிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக நேற்று, ஜப்பானின் முன்னணி நிறுவனமான ஓம்ரான் ஹெல்த்கேர், இந்தியாவில் முதல்முறையாக தமிழகத்தில் புதிய தொழிற்சாலையை நிறுவ முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம் மேற்கொண்டது.

ஓம்ரான் கார்ப்பரேஷனின் ஒரு பிரிவான ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம், டிஜிட்டல் ரத்த அழுத்தமானிட்டர்கள், சுவாச சிகிச்சைக்கான நெபுலைசர்கள் ஆகியவற்றை தயாரித்து விற்பனை செய்வதில் உலக அளவில் முன்னணியில் உள்ளது.

இந்நிறுவனம், தமிழகத்தில் ரூ.128 கோடி முதலீட்டில் தானியங்கி ரத்த அழுத்த மானிட்டர் உற்பத்தி தொழிற்சாலையை நிறுவ, தமிழக முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் நேற்று டோக்கியோவில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டது.


இதன்மூலம், உலகின் முன்னணி நிறுவனமான ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம் இந்தியாவின் முதல் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி தொழிற்சாலையை தமிழகத்தில் தொடங்க உள்ளது.

முதல்வர் ஸ்டாலின் பேசியபோது, ‘‘ஓம்ரான் நிறுவனத்தின் முதலீடு, தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழ்நிலை மற்றும் வெற்றிகரமான மருத்துவ கட்டமைப்பின் மீதான உங்கள் நம்பிக்கையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது’’ என்றார்.

முன்னதாக, டோக்கியோவில் உள்ள உலகின் அதிநவீன தகவல்தொழில்நுட்ப, மின்னணு நிறுவனமான என்இசி ஃபியூச்சர் கிரியேஷன் ஹப்-க்கு சென்று முதல்வர் ஸ்டாலின் பார்வையிட்டார். அங்கு உள்ள நவீன தொழில்நுட்ப வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

தமிழகத்துக்கான முக அங்கீகார செயற்கை நுண்ணறிவு, குவான்டம் கம்ப்யூட்டிங் நோக்கம், தமிழகத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்து மையத்தின் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

## இந்தியா வந்துள்ள கம்போடியா மன்னருடன் ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை



**புதுடெல்லி:** மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ள கம்போடிய மன்னர் நரோடம் சிகாமணியை, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

70 வயதாகும் கம்போடிய மன்னர் நரோடம் சிகாமணி, முதன்முறையாக இந்தியா வந்துள்ளார். நேற்று மாலை இந்தியா வந்த அவர், இன்று காலை குடியரசுத் தலைவர் மாளிகைக்குச் சென்றார். அங்கு அவரை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவும், பிரதமர் நரேந்திர மோடியும் வரவேற்றனர். இதையடுத்து, அவருக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

இதையடுத்து, கம்போனிய மன்னரை, ஜெய்சங்கர் நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இது குறித்து ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "கம்போடிய மன்னரை சந்தித்தது கவுரவம். நமது இரு நாடுகளும் நமது இராஜதந்திர உறவுகளின் 70வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில், அவரது வருகை, நமக்கிடையேயான வலுவான நாகரீகப் பிணைப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. பாரம்பரிய பாதுகாப்பு, கண்ணிவெடி அகற்றல், நீர் பாதுகாப்பு மற்றும் சமூக-பொருளாதார திட்டங்கள் ஆகியவற்றில் காணப்படும்

இருதரப்பு ஒத்துழைப்பின் மூலம் இரு நாடுகளின் நட்புறவு வெளிப்படுத்தப்படுகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் வழங்கப்படும் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் கம்போடியாவைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. கம்போடியாவில் மேற்கொள்ளப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி உதவியை இந்தியா அளித்து வருகிறது. கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட் கோயில், தா புரோம், பிரீச் கோயில் ஆகியவை இந்திய நிதி உதவியின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளன.

2022-23 நிதி ஆண்டில் இரு தரப்பு வர்த்தகம் 366 மில்லியன் டாலராக உள்ளது. கம்போடியாவில் இந்தியா 115 மில்லியன் டாலர் முதலீடு செய்துள்ளது. குறிப்பாக மருந்து உற்பத்தி, ஆட்டோமொபைல்ஸ் துறைகளில் இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1.5 மில்லியன் டாலர் மதிப்புள்ள கண்ணிவெடி அகற்றும் கருவிகளை இந்தியா கம்போடியாவுக்கு அன்பளிப்பாக அளித்துள்ளது. அதோடு, 50 மில்லியன் டாலர் அளவுக்கு இந்தியாவில் பாதுகாப்பு உபகரணங்களை வாங்குவதற்கும் கடனுதவி அளித்துள்ளது. கம்போடிய ராணுவ வீரர்களுக்கு இந்திய ராணுவம் பயிற்சி அளிக்கிறது. கம்போடியாவுக்குச் சென்றும் நமது ராணுவ வீரர்கள், கம்போடிய ராணுவத்தினருக்கு பயற்சி அளித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசிய அளவிலான நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற மதுரை மாணவர்



**மதுரை:** உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடந்த தேசிய அளவிலான நீச்சல் போட்டியில் மதுரையைச் சேர்ந்த கல்லூரி மாணவர் பி.விக்காஸ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம், நொய்டாவில் swimming சார்பில் தேசிய அளவில் பல்கலைக்கழக மாணவ - மாணவியருக்கான நீச்சல் போட்டி மே 26 முதல் 29 வரை நடைபெற்றது. இப்போட்டியில் மதுரை நீச்சல் வீரர் பி.விக்காஸ் பங்கேற்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். இதில் 50 மீ ஃப்ரிஸ்டைல் பிரிவில் 23.47 வினாடிகளில் நீந்தி தங்கப்பதக்கம் வென்றார். அதேபோல், 100 மீ ப்ரிஸ்டைல் பிரிவில் 52.78 வினாடிகள் நீந்தி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

தேசிய அளவில் தங்கம் வென்று பெருமை சேர்த்த வீரர் பி.விக்காஸூக்கு, தமிழ்நாடு நீச்சல் சங்க துணைத்தலைவர் எம்.ஸ்டாலின் ஆரோக்கியராஜ், மதுரை மாவட்ட விளையாட்டு அலுவலர் கே.ராஜா, மாவட்ட நீச்சல் சங்க செயலாளர் என்.கண்ணன் மற்றும் நீச்சல் வீரர்கள் பாராட்டினர்.

## இந்திய மல்யுத்த வீராங்கனைகள் கையாளப்பட்ட விதத்திற்கு ஐக்கிய உலக மல்யுத்த அமைப்பு கண்டனம்




**லோசான்:** இந்திய மல்யுத்த வீராங்கனைகள் மற்றும் வீரர்கள் கையாளப்பட்டு வரும் விதத்திற்கு கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது ஐக்கிய உலக மல்யுத்த அமைப்பு (UWW). அறவழியில் நீதிகேட்டு போராடி வரும் மல்யுத்த

வீரர்கள் நடத்தப்படும் விதம் கவலை அளிக்கும் வகையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பு தலைவரான பிரிஜ் பூஷண் சரண் சிங், பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாக இந்திய மல்யுத்த வீராங்கனைகள் குற்றச்சாட்டு வைத்தனர். அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோரி கடந்த மாதம் முதல் டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தி வந்தனர். இதில் இந்தியாவுக்காக ஒலிம்பிக் உட்பட உலக அளவில் பதக்கம் வென்ற சாக்சி மாலிக், வினேஷ் போகத் மற்றும் பஜ்ரங் பூனியா ஆகியோர் அடங்குவர்.

கடந்த ஞாயிறு அன்று (மே 28) போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மல்யுத்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், அவர்களுக்கு ஆதரவாக உள்ள விவசாயிகள் என அனைவரும் இணைந்து புதிய நாடாளுமன்றத்தை நோக்கி பேரணியாக செல்ல முயன்றனர். அவர்களை தடுத்து நிறுத்திய டெல்லி போலீஸார், கைதும் செய்தனர். தொடர்ந்து அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அதோடு ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தும் அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த சூழலில் தாங்கள் பெற்ற பதக்கங்களை கங்கையில் வீச உள்ளதாக மல்யுத்த வீராங்கனைகள் நேற்று அறிவித்தனர். இருந்த போதும் இந்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு 5 நாட்கள் கெடு விதிக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில் ஐக்கிய உலக மல்யுத்த அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது..

“குற்றச்சாட்டுக்கு ஆளாகி உள்ள இந்திய மல்யுத்த கூட்டமைப்பு தலைவர் பிரிஜ் பூஷண் சரண் சிங்கிடம் முறையான விசாரணை நடத்த வலியுறுத்துகிறோம். கடந்த சில நாட்களாக மல்யுத்த வீராங்கனைகள், வீரர்கள் கையாளப்படும் விதம் கவலை அளிக்கிறது. தங்கள் போராட்டத்தை முன்னெடுக்கும் விதமாக பேரணி சென்ற அவர்களை போலீஸார் கைது செய்தது கவலை தருகிறது. ஒரு மாத

காலத்திற்கும் மேலாக அவர்கள் போராடி வந்த இடமும் அதிகாரிகளால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே திட்டமிட்டபடி 45 நாட்கள் கெடுவுக்குள் இந்திய மல்யுத்த கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்படி இல்லையென்றால் கூட்டமைப்பை ஐக்கிய உலக மல்யுத்த கூட்டமைப்பு சஸ்பெண்ட் செய்யும். அதன் பின்னர் வீரர்கள் தனி கொடியின் கீழ் விளையாட அனுமதிக்கப்படுவார்கள்" என தெரிவித்துள்ளது ஐக்கிய உலக மல்யுத்த கூட்டமைப்பு.

EVA STALIN IAS